

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் (14.08.2025) அன்று தலைமைச் செயலகத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை சார்பில் திருநெல்வேலி அண்ணா விளையாட்டரங்கத்தில் ரூபாய் 1 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள பாரா விளையாட்டு மைதானத்தை காணொளி காட்சி வாயிலாக துவக்கி வைத்தார்கள்.அதனைத் தொடர்ந்து நெல்லை மாவட்டம் பாளையங் கோட்டை அண்ணா விளையாட்டரங் கத்தில் நடைபெற்ற நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று துவக்கி வைத்தார்.உடன் மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் மேயர் ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜ் உள்பட பலர் உள்ளனர்.



கடலூர் மேற்கு மாவட்டம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதி மேலிருப்பு ஊராட்சியைச் சேர்ந்த அ.தி.மு.க., பா.ம.க., பா.ஜ.க. உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்த 500 பேர், ஆண், பெண் நிர்வாகிகள், பா.ம.க நிர்வாகி அ.பாபு தலைமையில் சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ, முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். சபா.பாலமுருகன், அ.குணசேகரன், ராஜா, அறிவழகன், ஆடலரசு, செல்வகுமார், ஐயப்பன், ஜெகநாதன், வீர.இராமச்சந்திரன், தினகரன், அரிதாஸ், அன்பழகன், சத்தியராஜ், பண்ருட்டி தெற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் – சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தூய்மைப் பணியாளர்களின் மாண்பினை

# ‘திராவிட மாடல்’ அரசு ஒருபோதும் விட்டுக் கொடுக்காது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, ஆக. 16 -**

**ஓயாமல் உழைக்கும் தூய்மைப் பணியாளர்களின் மாண்பினை திராவிட மாடல் அரசு ஒருபோதும் விட்டுக் கொடுக்காது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உறுதியாக தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவரது சமூக வலைதளப் பதிவு வருமாறு:

நாளும் நம் நகரங்கள் இயங்க நள்ளிரவு, புயல், மழை, வெள்ளம் என எந்நேரமும் ஓயாமல் உழைக்கும் தூய்மைப் பணியாளர்களின் மாண்பினை நமது #Dravidian Model அரசு ஒருபோதும் விட்டுக் கொடுக்காது.

4 ஆண்டுகளில் அவர்களுக்காக நாம் நிறைவேற்றியுள்ள பல நலத் திட்டங்களோடு, அவர்களின் மற்ற நியாயமான கோரிக்கைகளையும் பரிசீலித்து,

- தூய்மைப் பணியாளர்களுக்குக் காலை உணவு
- தூய்மைப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு உயர்கல்வி ஊக்கத்தொகை
- தூய்மைப் பணியாளர்களின் குடும்பத்தினருக்குச் சுயதொழில் உதவி
- தூய்மைப் பணியாளர்களின் நலவாழ்வுக்காக ரூ.10 லட்சம் காப்பீடு
- தூய்மைப் பணியாளர்களுக்கு 30 ஆயிரம் வீடுகள்/குடியிருப்புகள்
- பணியின்போது இறக்க நேரிட்டால் ரூ. 10 லட்சம் நிவாரண நிதி
- தூய்மைப் பணியாளர்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் கண்டறிவதற்கும், சிகிச்சை அளிப்பதற்கும் தேவையான தனித்திட்டம்

முதலிய புதிய நலத்திட்டங்களையும் செயல்படுத்தவுள்ளோம்!

இது என்றும் உங்களுடன் உங்களுக்காக நிற்கும் எளியோரின் அரசு!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### ‘உங்களுடன் ஸ்டாலின்’ “நலம் காக்கும் ஸ்டாலின்” திட்டங்கள் குறித்து

# அனைத்து மாவட்ட ஆட்சியர்களுடன் ஆய்வு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலியில் மேற்கொண்டார்!

**சென்னை, ஆக.16 –**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.8.2025) தலைமைச் செயலகத்தில், “உங்களுடன் ஸ்டாலின்” மற்றும் “நலம் காக்கும் ஸ்டாலின்” ஆகிய திட்டங்களின் செயலாக்கம் குறித்து அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக ஆய்வு மேற்கொண்டார்.**

இக்கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பொதுமக்களின் பல்வேறு கோரிக்கைகளையும் தேவைகளையும் உடனடியாக குறிப்பிட்ட கால அளவிற்குள் தீர்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தொடங்கப்பட்டு சிறப்பாக நடத்தப்பட்டு வரும் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டம் மக்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்று வருவதை தொடர்ந்து, இதற்காக நன்கு திட்டமிட்டுப் பணியாற்றி வரும் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்களையும் பாராட்டினார்.

அதேபோன்று, பொதுமக்களின் உடல் நலம் காக்கும் வகையில் நடத்தப்பட்டு வரும் “நலம் காக்கும் ஸ்டாலின்” திட்டமும் மிகச் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதால், அதற்கான பணிகளில் ஈடுபட்டு வரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையைச் சார்ந்த மருத்துவர்கள் மற்றும் துறை அலு வலர்களையும் பாராட்டினார்.

இந்த ஆய்வுக் கூட்ட த்தில், மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் பெறப்பட்ட மனுக்களுக்கு விரைவாகத் தீர்வு காணப்பட வேண்டும் என்றும், குறிப்பாக, வருவாய்த் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறைகளில் நிலுவையில் உள்ள மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

முதியோர் ஓய்வூதியம், பட்டா மாறுதல், பட்டாவில் பெயர் திருத்தம் ஆகியவை தொடர்பான மனுக்களில் நிலுவையில் உள்ளவற்றை விரைந்து நடவடிக்கை எடுத்து பயனாளிகளுக்கு உரிய உதவிகளை செய்திட வேண்டு மென்று கேட்டுக்கொண்டதோடு, பொதுமக்கள் அளிக்கும் மனுக்களுக்கு முடிவான பதில் தரப்பட வேண்டும் என்று ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டதை மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் வலியுறுத்தினார்.

“உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்களில் நடைபெறும் இடங்களில் பொதுமக்களுக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருவது குறித்த விவரங்களையும் கேட்டறிந்தார்.

‘நலம் காக்கும் ஸ்டாலின்’ முகாம்களின் திட்ட ஏற்பாடுகளில் ஒருசில இடங்களில் இரத்தப் பரிசோதனை முடிவுகள் வழங்குவதில் தாமதம், போக்குவரத்து ஏற்பாடுகள் போன்றவை குறித்து தனது கவனத்திற்கு வந்ததாகவும், அதனை சரிசெய்திட வேண்டு மென்று அறிவுறுத்தியதோடு, டோக்கன் வழங்கும் பகுதிகளில் கூட்டத்தை கட்டுப்படுத்திட அதிக கவுண்டர்களை ஏற்படுத்திட வேண்டும் என்றும், முகாம்கள் நடப்பது குறித்து பொதுமக்கள் அறிந்திடும் வகையில் விளம்பரங்கள் செய்திட வேண்டும் என்றும், முகாம்களில் பொதுமக்களுக்கு குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் போதுமான அளவு ஏற்படுத்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

இவற்றையெல்லாம், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கவனத்தில் கொண்டு, குறைபாடுகள் இல்லாமல் “உங்களுடன் ஸ்டாலின்” மற்றும் “நலம் காக்கும் ஸ்டாலின்” முகாம்களை நடத்திட வேண்டும் என்று கேட்டுக் கொண்டதோடு, முகாம்களில் பெறப்படும் மனுக்கள் மீது உரிய காலத்தில் நடவடிக்கை மேற்கொண்டு, மனுதாரர்களின் கோரிக்கைகளுக்கு தீர்வு கண்டு, அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்துதர வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் நா. முருகா னந்தம், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### உச்சநீதிமன்ற உத்தரவுப்படி அபராதம் விதிக்கப்பட்ட

### அ.தி.மு.க. எம்.பி.யான சி.வி.சண்முகம், தமிழ்நாடு அரசுக்குச் செலுத்திய

# ரூ.10 லட்சம் - கல்வராயன் மலைவாழ் மக்களுக்காக அரசு நடத்தும் “நலம் காக்கும் ஸ்டாலின்” திட்டத்திற்கு பயன்படுத்தப்படும்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

*சென்னை, ஆக. 16 -*

*உச்சநீதிமன்ற உத்தரவுப்படி, அபராதம் விதிக்கப்பட்ட அ.தி.மு.க. எம்.பி.யான சி.வி.சண்முகம், தமிழ்நாடு அரசுக்கு செலுத்திய ரூபாய் 10 லட்சம் கல்வராயன் மலை வட்டார மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்த அங்கு நடைபெறும் ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ திட்டத்திற்கு பயன்படுத்திக்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளதாக அரசின் ‘முதல்வரின் முகவரித் துறை’ தெரிவித்துள்ளது.*

*முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 15.07.2025 அன்று கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் அரசு துறைகளை அன்றாடம் அணுகும் பொதுமக்களுக்கு, அரசின் சேவைகள் விரைவாகவும் எளிதாகவும் அவர்களைச் சென்று சேரும் வகையிலும் நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்திட, “உங்களுடன் ஸ்டாலின்” என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்தார்.*

*‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டத்தில் முதலமைச்சர் ஸ்டாலின் பெயரைப் பயன்படுத்த அனுமதி அளிக்கக் கூடாது என அ.தி.மு.க. எம்.பி. சி.வி. சண்முகம் அவர்களால் தொடரப்பட்ட வழக்கின் மீது தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு வழக்கில், உச்சநீதிமன்றம் அம்மனுவை தள்ளுபடி செய்தும், ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் பெயரைப் பயன்படுத்த அனுமதி அளித்தும், வழக்கு தொடுத்த சி.வி.சண்முகம் அவர்களுக்கு ரூ.10 லட்சம் அபராதம் விதித்தும் உத்தரவிட்டது.*

*இந்த அபராதத் தொகையினை தமிழ்நாடு அரசுக்கு செலுத்தவும், அந்த தொகையினை தமிழ்நாடு அரசு சார்பில் விளிம்பு நிலையில் உள்ள மக்களுக்கு செயல்படுத்தப்படும் நலத்திட்டங்களுக்காக பயன்படுத்தவும் உத்தரவிட்டது.*

*இந்த உத்தரவிற்கிணங்க சி.வி. சண்முகம் அவர்கள் அபராதத் தொகையான ரூ.10 லட்சத்தை நேற்று (14.8.2025) தமிழ்நாடு அரசுக்கு செலுத்தியுள்ளார்.*

*தமிழ்நாடு அரசு இந்த தொகையை கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கல்வராயன் மலை வட்டாரத்தில் அதிகமாக வசிக்கும் மலைவாழ் மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்த சுகாதார நலத்திட்டங்களுக்கும் அங்கு நடைபெறும் ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ திட்டத்திற்கும் பயன்படுத்தி கொள்ளவும் உத்தரவிட்டுள்ளது.*



சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் ஒன்றிய தெற்கு கழகத்தின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு ஒன்றியச் செயலாளர் யோக கிருஷ்ணகுமார் தலைமையில் நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள் .



சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் கிழக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் ஒன்றிய செயலாளர் வே.ஆரோக்கியசாமி தலைமையில் மூத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி நலிவுற்ற மகளிருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

### பீகாரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம்!

## ஆதாரை அடையாள ஆவணமாக தேர்தல் ஆணையம் ஏற்க வேண்டும்!

### நீக்கப்பட்ட 65 இலட்சம் பேரின் விவரங்களை இணையதளத்தில் வெளியிடுக! உச்சநீதிமன்றம் உத்தரவு!

*புதுடெல்லி, ஆக. 16 -*

*ஆதாரை அடையாள ஆவணமாக தேர்தல் ஆணையம் ஏற்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*

*பீகாரில் சட்டமன்றத் தேர்தல் வர உள்ள நிலையில் தேர்தல் ஆணையம் சர்ச்சைக்குரிய வகையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொண்டது. கடந்த ஆகஸ்ட் 1 இல் வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் 65 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்ப ட்டது அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அவர்கள் அனைவரும் உயிரிழந்தவர்கள், புலம் பெயர்ந்த வர்கள், சட்டவிரோத குடியேறிகள் என ஆணையம் தெரிவித்தது. இதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் எதிர்க்கட்சிகள் மற்றும் ஜனநாயக சீர்திருத்த சங்கம் உள்ளிட்ட அமைப்புகள் வழக்கு தொடர்ந்தன.*

*இந்த வார தொடங்கில் இந்த வழக்கில் பிராமண பத்திரம் தாக்கல் செய்த் தேர்தல் ஆணையம், சட்டப்படி, நீக்கப்பட்ட 65 லட்சம் பேரின் விவரங்களை மனுதாரர்களுக்கு வழங்க வேண்டிய அவசியம் இல்லை என தெரிவித்திருந்தது. இந்நிலையில் இந்த வழக்கு நேற்று முன்தினம் நீதிபதிகள் சூர்யகாந்த், ஜாய்மாலா ஆகியோர் அமர்வில் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, பீகார் வாக்காளர் பட்டியலில் நீக்கப்பட்ட 65 லட்சம் பேரின் விவரங்களை தேர்தல் ஆணையம் அதன் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் ஆகஸ்ட் 19 ஆம் தேதிக்குள் வெளியிட நீதிபதிகள் அதிரடி உத்தரவு பிறப்பித்தனர்.*

*மேலும் இதுதொடர்பான அறிக்கையை 22 ஆம் தேதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவும் அறிவுறுத்தினர். மக்கள் தெளிவு பெறவும், திருத்தங்களுக்கு விண்ணப்பிக்க ஏதுவாகவும் நீக்கப்பட்ட 65 லட்சம் வாக்காளர்களின் விவரங்கள் குறித்த வெளிப்படைத் தன்மை தேவை என நீதிபதிகள் தெரிவித்தனர். மேலும், வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தத்தில், ஆதார் அட்டையையும், EPIC நம்பர்களையும் அடையாள ஆவணமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் எனத் தேர்தல் ஆணையத்திற்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.*

*முன்னதாக ஆதார் அட்டை, குடியுரிமை ஆவணமாக கருதப்படாது என தேர்தல் ஆணையம் தெரிவித்திருந்த நிலையில் இந்த உத்தரவு வந்துள்ளது. தேர்தல் ஆணையத்தின் பணிகள் வாக்காளர்களுக்கு வசதியாகவும், சிரமத்தை ஏற்படுத்தாத வகையிலும் இருக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் அறிவுரை வழங்கியது.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**எஸ்.பி. பச்சையப்பன்**

**ஆகஸ்ட் 16 (2022)**



**தனது இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**1964ஆம் ஆண்டு கள்ளக்குறிச்சி வட்டச் செயலாளராகவும், அதனை தொடர்ந்து 1991 வரை ஒன்றியச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**1967ல் சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதியில், கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**ஒன்றிய பெருந்தலைவராகவும் , பல்வேறு கூட்டுறவு சங்கங்களின் தலைவராகவும் இருந்தவர்.**

**1964ல் கடலூரில் இந்தி எதிர்ப்பு அறப்போரில் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**